# ஜனவரி மாத சுற்றுமடல்








*"ஆண்டவர் உங்களுக்கு ஆசி வழங்கி உங்களைக் காப்பாராக!*

*தம் திருமுகத்தை உம்மேல் ஒளிரச் செய்து உம்மீது அருள்*

*பொழிவாராக"*

*இறை இயேசுவில் அன்பிற்குரிய சகோதரிகளே!*

புலரும் புத்தாண்டு நம் அனைவருக்கும் புது வாழ்வும் புத்துணர்வும் புது விடியலும் நல்கிட வாழ்த்துக்கள்.

***மீண்டும் ஓர் புதிய ஆண்டு நம் கையில்.......***

***கடந்த ஆண்டுக்கு நன்றி சொல்லி***

***நடந்த நிகழ்வுகளுக்கும் நன்றி சொல்லி***

***மீண்டும் ஒரு வசந்தத்தை வாசிப்போம்....***

***புது விடியலை சுவாசிப்போம்.***

"புத்தாண்டு என்பது புதிதாக நிரப்பப்பட வேண்டிய முந்நூற்று அறுபத்து ஐந்து பக்கங்கள் கொண்ட ஒரு புதிய புத்தகம். அதில் நல்லவற்றை எழுதுங்கள்" – என்கிறார் Braw Paisely

*"கடந்த காலம் என்ற படிக்கட்டுக்கள் இன்றி புத்தாண்டு என்ற எதிர்காலத்திற்குள் நுழைய முடியாது" என்கிறார்* Mehmet Murat

***வாழ்வு என்பது நம்மைக் கண்டுபிடிப்பது அல்ல;***

***வாழ்வு என்பது நம்மை உருவாக்குவதே" என்கிறார் George Bernard*** . இத்தகைய வாழ்வினை வாழ இன்னொரு ஆண்டு நம் கையில். புதிய ஆண்டை மகிழ்வோடு வரவேற்கின்ற இந்த நாட்களில் கடந்த ஆண்டை நம் கண்முன் கொண்டு வந்து அவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்தியுள்ளோம் என்பதை சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம். ஆங்கிலப் புத்தாண்டின் முதல் மாதமான "ஜனவரி" என்ற வார்த்தையானது "ஜானுஸ்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது. "ஜானுஸ்" என்பது ஒரு கிரேக்கக் கடவுளின் பெயர். இக்கடவுளுக்கு தலையின் முன்புறம் ஒன்றும் பின்புறம் ஒன்றுமாக இரண்டு முகங்கள் உண்டு. கடந்த காலத்திலிருந்து பாடம் கற்று எதிர்காலத்திற்குள் ஏற்றத்தோடு பயணிக்க வேண்டும் என்பதே இங்கு மறைந்திருக்கும் செய்தி. எனவே இப்புத்தாண்டில் கடந்த கால வாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்து அதன் பின்னணியில் எதிர்காலத்திற்குத் திட்டமிட

அழைக்கப்படுகின்றோம். என்ன திட்டம்? எதற்காக அந்தத் திட்டம்? லூக்கா நற்செய்தியில் 13-ஆம் அதிகாரத்தில் வரும் அத்திமரம் உவமையில் தோட்டத் தொழிலாளர் கனி தருவதற்கான நல்ல சூழலையும் காலத்தையும் கொடுத்திருந்தாலும் அந்த அத்தி மரம் பலன் தரவில்லை. இருந்தபோதிலும் அத்தோட்டத் தொழிலாளி ஓராண்டு காலத்தை நீட்டிப்புச் செய்து அம்மரம் கனி தருமா என எதிர்பார்த்தார். இறைவனும் அத்தோட்டத் தொழிலாளரைப் போன்று அவர் நமக்குக் கொடுத்த காலத்தையும் கொடைகளையும் பயன்படுத்தி கனி தரும் மக்களாக நாம் வாழ்வோம் என எதிர்பார்க்கிறார். நீதியையும் நேர்மையையும் அன்பையும் அமைதியையும் ஒற்றுமையுணர்வையும் கனியாக விளைவித்து இந்த உலகத்திற்கு தருவோம் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். நாமும் அவரது எதிர்பார்ப்பிற்கேற்பக் கனி தர முயற்சித்துள்ளோம். இருந்த போதிலும் மீண்டும் ஒரு புதிய ஆண்டினைத் தந்து இன்னும் மிகுதியாகக் கனிதரவேண்டுமென ஆவலுடன் காத்திருக்கும் ஆண்டவரின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வதாய் 2020 அமையட்டும்.



“இறைவன் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது. எனவேதான் அன்னையர்களைப் படைத்தான் என்கிறது யூதப் பழமொழி. ஒவ்வொரு தாயும் இறைவன் வாழும் ஆலயம் என்றால் அன்னை மரியா இறைவன் உறைந்த ஆலயம். இறைவவனின் அன்னையை நமக்கெல்லாம் அன்னையாக தருகிறது இப்புத்தாண்டு. நமக்கொரு அன்பான அன்னை கிடைத்துள்ளார்

**“தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை”** நாம் சோர்ந்து போகும் நேரமெல்லாம், தேடிச் செல்லும் பொழுதெல்லாம் நமக்காக பரிந்து பேசும் பாசமிகு தாய் நமக்காக இருக்கிறாள் என்ற புது நம்பிக்கையைத் தருகிறது இப்புத்தாண்டு. கடந்து வந்த பாதையில் கசப்பான அனுபவங்களை மறந்து புதிய சாதனை படைத்து வாழ்வில் ஏற்றம் காண நம்பிக்கை கொண்டு இப்புத்தாண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்போம். இறைவன் நம் அமல சபையையும், நம் சிவகங்கை லார்மே மாநிலத்தையும், நம் ஒவ்வொருவரையும் நிறைவாய் ஆசீர்வதித்து நம்மை இவ்வாண்டு முழுவதும் வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு அன்னை தெரசாவின் செபத்தை நமதாக்குவோம்.

“***இறைவா, நான் எனது இந்த ஆண்டை(தினத்தை) ஆரம்பிப்பதற்கு முன்பு உன்னருளைப் பெற உம்மிடம் வருகின்றேன். உமது விழிகளின் பார்வை எம் வழிகளில் பதிந்திடட்டும். உமது தோழமை தந்த உறுதியில் நான் இப்புதிய ஆண்டில் என்னுடைய கடமையைச் செய்வேனாக. பேரமைதியினால் என்னுடைய மனதை நிரப்பியருளும். உமது பேரொளியால் எனது சிந்தனைகளை நிரப்பி தேவைப்படுவோர்க்கு உன்னையே வழங்க எனக்கு வலிமை தாரும்***” – ***புனித அன்னை தெரசா***

தமிழர் திருநாளாம் தைப் பொங்கலைச் சிறப்பிக்கும் மாதமாகவும் இம்மாதம் அமைந்துள்ளது. உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொங்கல் விழா, பழையன கழிந்து புதியன தோற்றுவிக்கும் பொங்கல் விழா. நம் இல்லங்களில் உறவினை வளர்ப்பதற்கு உதவுவதாய் அமையட்டும். மனிதனைத் தேடி வந்து உறவுப்பாலம் அமைக்க வந்த இயேசு நம் ஒவ்வொருவருக்கும் பிறப்பிற்கான காரணத்தை வைத்துள்ளார் அவரின் வெளிப்பாடுகளைப் புரிந்து உய்த்துணர்ந்து நம் வாழ்வை அர்ப்பணிப்போம். ஏழ்மையிலும் எதார்த்தத்திலும் அன்றாட வாழ்விலும் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இயேசுவைத் தேடுவோம் தேடல் உள்ள வாழ்வில் தான் அர்த்தம் உண்டு. ஆண்டின் முதல் நாளை நம் தாய்த் திருஅவை அன்னை மரியாளுக்கு அர்ப்பணிக்கும்



வகையில் இறைவனின் தாய் அன்னை மரியா என்பதை நினைவு கூர்ந்து சிறப்பிக்கின்றது அன்னை மரியின் அரவணைப்பில் அன்பின் ஆண்டாக இவ்வாண்டு அமைய அனைவரையும் வாழ்த்துகிறேன்.

இப்புதிய ஆண்டில்..........




*நன்மைகள் நிரம்பட்டும், நம் நம்பிக்கைகள் நிமிரட்டும்.*

*புண்ணியம் பொங்கட்டும், நல் புதுமைகள் பெருகட்டும்.*

*உண்மைகள் ஒளிரட்டும், சமூக உறவுகள் உயரட்டும்.*

*மன்னிப்பு மலரட்டும், மனித மனங்கள் விரியட்டும்.*

*வளமைகள் வளரட்டும், நம் வாழ்வு செழிக்கட்டும்.*

***அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும்***

***பொங்கல் நல்வாழ்த்துக்கள்.***

கிறிஸ்துவில் அன்புள்ள

(சகோ. அல்போன்ஸ் பாத்திமா)

# *நாம விழா வாழ்த்துக்கள்!!!*

| | | | |
|---|---|---|---|
| 1. | சகோ. ஜெனஸ்மேரி | ஜனவரி 03 (பி) | மானாமதுரை |
| 2. | சகோ. ரோஸ் ரைமண்ட் | ஜனவரி 07 | கந்திக்குப்பம் |
| 3. | சகோ. ஜாஸ்மின் சகாயம் | ஜனவரி 14 (பி) | செல்லியம்பட்டி |
| 4. | சகோ. அந்தோணி மேரி I | ஜனவரி 17 | இராம்நகர் |
| 5. | சகோ.அந்தோணியம்மாள் ஆரோக்கியம் | ” | புளியால் - ஜோவில்லா |
| 6. | சகோ. அந்தோணி மேரி M | ” | அருள்நகர் - தேவகோட்டை |
| 7. | சகோ. அந்தோணி மேரி P | ” | இராம்நாடு |
| 8. | சகோ. ஜான்சி ஹெலன் | ஜனவரி 19 (பி) | லியோனார்டு இல்லம் |
| 9. | சகோ. ஜெயமேரி S | ஜனவரி 26 (பி) | காரைக்குடி |
| 10. | சகோ. பிலோமினாள் | ஜனவரி 28 (பி) | இராம்நகர் |